# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே




நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com



செவ்வாய்க்கிழமை 20.09.2022 supeedsam.com supeedsam@gmail.com


## மேற்குலக நாடுகளும் தொடர்ச்சியாக
# தமிழர்களை ஏமாற்றுகின்றது



தமிழர்களின் விடையங்களை பயன்படுத்தி, அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையை பகடைக்காயாக பயன்படுத்துகிறது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், மனித உரிமை உதவி ஆணையாளர் இலங்கை தொடர்பான பரிந்துரைகளை முன் வைத்துள்ளார்.

வடக்கு கிழக்கில் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கத்தினால்

02 ஆம் பக்கத்தில்...

## சீனாவை விஞ்சிய
# இந்தியா

இந்த ஆண்டின் கடந்த நான்கு மாதங்களில் இலங்கைக்கு 968 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் நிதியை பெற்றுக்கொடுத்துள்ள இந்தியா, சீனாவை விஞ்சிய வகையில், இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கிய இருதரப்பு நாடாக மாறியுள்ளதாக சர்வதேச அமைப்புகளின் அவதானிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் இலங்கைக்கு அதிகளவான இருதரப்பு கடன் வழங்குநராக சீனா காணப்பட்டதுடன், குறித்த காலகட்டத்தில் இலங்கைக்கு

02 ஆம் பக்கத்தில்...

## திலீபனின் நினைவேந்தலை மேற்கோள்வதற்கு
# பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது!



தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்காக 15 பேரைக் கொண்ட பொதுக் கட்டமைப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தியாகதீபம் திலீபனை நினைவேந்தலை மேற்கொள்ள பொதுக் கட்டமைப்பொன்றினை உருவாக்கி முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில்

02 ஆம் பக்கத்தில்...

## அடுத்த பூரணையில்
# இருள் சூழும்

மத வழிபாட்டுத் தலங்களுக்கான மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்வரும் வப் போயா (பூரணை) தினத்தன்று அனைத்து விகாரைகளிலும் மின்விளக்குகளை அணைக்குமாறு மத்திய மாகாண மகா சங்க சபையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண மகாசங்க சபை கூட்டம் நேற்று (18) இடம்பெற்ற போது, பிக்குகள் குழுவொன்றினால இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

விகாரைகளுக்கான மின் கட்டணங்கள் ஐந்து முதல் ஆறு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், தனது விகாரைக்கான கட்டணம் 60,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கலஹா சிறிசாந்த தேரர் சுட்டிக்காட்டினார்.

02 ஆம் பக்கத்தில்...

## ஜெனீவாவில் கவனயீர்ப்பு
# போராட்டம்!



ஈழத்தமிழர்களுக்கு நேர்ந்த அநீதிகளுக்கு நீதி வேண்டி இன்றைய தினம் சுவிட்சர்லாந்து ஜெனீவாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்று (19) பி.ப 6 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது யுத்தத்தில் இனப்படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

02 ஆம் பக்கத்தில்...

## யாழ்.பல்கலையில் சங்காவுக்குச் சிலை
# நிர்வாகம் மறுப்பு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககாரவுக்கு சிலை நிறுவுவதற்காக யாரும் அனுமதி கோரவில்லை என்றும், அவ்வாறான எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் வைக்கப்படுவதற்காக துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககாரவின்

02 ஆம் பக்கத்தில்...



## உலக மக்களின் கண்ணீருடன்
# ராணியின் உடல் நல்லடக்கம்!



## பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை





பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை அனுராதபுரம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ் இளைஞர்களை
# விடுவிக்க நடவடிக்கை



இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து இளைஞர்களையும் விரைவில் விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அதாவது, சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த போது இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...


கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்

சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738

supeedsam@gmail.com

# காத்தான்குடி மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் நிகழ்வு





(ந.குகதர்சன் )

மட்டக்களப்பு காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு காத்தான்குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் மீண்டும் பள்ளிக்கு போகலாம் நிகழ்வு இன்று நடைபெற்றது.

பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை நிருவாகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் 2000க்கு மேற்பட்ட பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

காத்தான்குடி பிரதான வீதி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்துக்கு முன்பாக இருந்து பழைய மாணவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பாடசாலை மைதானத்தில் காலைக் கூட்டம்

முன்னாள் அதிபர் எம்.எம்.மஹ்ரூப்கரீம் தலைமையில் நடைபெற்று உடற்பயிற்சி, கறாஅத் ஓதி தேசிய கீதம். பாடசாலை கீதம் பாடி நிகழ்வுகள் ஆரம்பமானது.

பின்னர் பழைய மாணவர்கள் பாடசாலை பழைய நினைவுகளை மீட்டதுடன் முன்பு கற்பித்த ஆசிரியர்களையும் சந்தித்தனர்.

பாடசாலை அதிபர் எம்.சி.எம்.ஏ.சத்தார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மீண்டும் பள்ளிக்கு போகலாம் பிரகடனம் நிறைவேற்றப்பட்டதுடன் பழைய மாணவர்கள் பாடசாலையின் தேவைகள் சிலவற்றை நிறைவேற்றவும் தாமாக முன்வந்தனர்.

இதில் பாடசாலையின் தேவைகள் பற்றிய கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டதுடன் பாடசாலையின் வரலாறு பற்றிய தொகுப்பு ஆவணப்படம் மற்றும் மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் பழைய மாணவர்களின் இல்ல விளையாட்டு போட்டி. கலை நிகழ்வு என்பனவும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர். எஸ்.எம்.எஸ்.உமர்மௌலானா, காத்தான்குடி கோட்டக்கல்வி அதிகாரி எம்.எம.கலாவுதீன் உட்பட

ஓய்வுபெற்ற அதிபர்கள். ஆசிரியர்கள் . பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கதிர் திருச்செல்வம் எழுதிய உயிரோடு நானாக நாவல் அறிமுக விழா

கதிர் திருச்செல்வம் எழுதிய உயிரோடு நானாக நாவல் அறிமுக விழா ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது விழாவிற்கான முதன்மை அழைப்பாளராக கிழக்கு மாகாணத்தின் மாகாண கூட்டுறவு ஆணையாளர் கிழக்கு மாகாண மாகாண கல்வி அமைச்சின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் அவர்கள் கலந்துகொண்டிருந்தார்

சிறப்பு அழைப்பாளராக மட்டக்களப்பு மேனாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மேனாள் பிரதி அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்

மகாவித்தியாலயத்தின் துணை முதல்வர் சண்முகம் இந்துஜன் அவர்கள் அறிமுக விழாவிற்கு தலைமை தாங்கினார் . மதிப்புக்குரிய பிரதிகளை முதன்மை அழைப்பாளர் வழங்க திருகோணமலை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினுடைய பிரதம பொறியியலாளர் திரு அமலதாஸ் வசந்தராஜா அவர்கள் பெற்றுக்கொண்டார்

நாவல் அறிமுக உரையினை மகுடம் ஆசிரியர் திரு மைக்கேல் கொலின் அவர்கள் வழங்கினார்

நூல் மதிப்பீட்டு உரையினை நூல் விமர்சகரான லலித கோபன் அவர்கள் வழங்கினார்

பள்ளி மாணவர்களதும் ஆசிரியர்களதும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் பள்ளி மாணவர்களின் வரவேற்பு ஆடலுடன் விழா சிறப்பாக நடைபெற்றது ,

விழாவில் கண்ணிலே என்ன உண்டு என்ற பள்ளி மாணவர்களின் பாடல் எல்லோர் மனதையும் மகிழ்ச்சிப்படுத்தியது.

செங்கலடி மற்றும் ஏறாவூர் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் பெரியோர்கள் எனலபல்துறை சார்ந்தோர் விழாவில் கலந்து சிறப்பித்தனர்







# வினாயகபுர கடற்கரையில் பட்டம் விட்டு 50 வது நாள் உரிமை போராட்டம்





( வி.ரி. சகாதேவராஜா)

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக நேற்று (19) திங்கட்கிழமை திருக்கோவில் வினாயகபுர கடற்கரையில் பட்டம் விட்டு 50 வது நூறுநாள் உரிமை போராட்டம் நடைபெற்றது.

இதன் கருப்பொருள் 'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் 'என்பதாகும்.

அம்பாரை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் வினாயகபுர கடற்கரையில் பவனியாக வருகை தந்த மக்கள் இவ்வாறான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள் வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை நோக்கிய பயணத்தில் 50 ஆவது தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை கௌரவமான அரசியல் தீர்வை வலியுறுத்தி பட்டம் ஏற்றப்பட்டது.

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் எனும் தொனிப் பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயற் திட்டத்தின் 50 ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

சிறுவர்கள், பொது மக்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பெண்கள் இணைந்து தமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்.

மேலும் பறக்கவிடப்பட்ட பட்டங்களில் எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்டு பறக்கவிடப்பட்டது.

கிராம மட்ட அமைப்பினர், விவசாய, மீனவ சங்கங்க பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டம் வடக்கு- கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த பூரணையில் இருள் சூழும்

**பூஜைகள் நடைபெறவுள்ள நிலையில், மத வழிபாட்டுத் தலங்களுக்கு இவ்வாறு அதிக கட்டணம் விதிப்பது கவலைக்குரியது என்று குற்றம் சுமத்திய அவர், இந்த விடயத்துக்கு எதிராக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மேலும் தெரிவித்தார்.**

# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து ..

இரா.சாணக்கியன் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் நாட்டின் பல பாகங்களிலும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

# சீனாவை விஞ்சிய இந்தியா

947 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை பெற்றுக்கொடுத்துள்ளது. இந்நிலையில் இந்த ஆண்டில் இந்தியாவே அதிக கடன்களை வழங்கியுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பலதரப்பு கடன் வழங்குநராக ஆசிய அபிவிருத்தி வங்கியே கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கியுள்ளதாகவும் 610 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜெனீவாவில் கவனயீர்ப்பு

இந்த போராட்டமானது சுவிட்சர்லாந்தில் வசிக்கும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்டது.

ஜெனீவா கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் இந்த காலப்பகுதியில் இந்த போராட்டமானது முன்னெடாக்கப்பட்மை குறிப்பிடத்தக்கது.ணீஇதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் புலிக்கொடியை கையில் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# தமிழ் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை

69 தமிழ் இளைஞர்களின் உறவினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

குறிப்பாக நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீன்பிடித் தொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாத காரணத்தினால் அவர்கள் இவ்வாறு வெளிநாடு செல்ல முயற்சித்ததாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 69 தமிழ் இளைஞர்களும் தற்போது பெங்களூர் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சட்டவிரோதமாக வேறு நாடுகளுக்கு செல்வதை ஒருபோதும் ஏற்க முடியாதென சுட்டிக்காட்டிய அமைச்சர், நட்புறவை பயன்படுத்தி கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# திலீபனின் நினைவேந்தலை மேற்கொள்வதற்கு

நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் ஏற்பாட்டில் நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த (சனிக்கிழமை)நடைபெற்ற கலந்துரையாடலின் தொடர்ச்சியாக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்றைய தினம் இடம்பெற்றது.

கடந்த கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டு ஏழு பேர் கொண்ட பொதுக் கட்டமைப்புக்கான அழைப்பாளர் குழு தெரிவு செய்யப்பட்டநிலையில் அந்தக் குழு, கலந்துரையாடலில் பங்கேற்காத அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்பனவற்றுடன் கலந்துரையாடி பொதுக்கட்டமைப்பை உருவாக்கி நினைவேந்தலை சிறப்பாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டநிலையில், மதகுருமார்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள், அரசியல் கைதிகளுக்கான அமைப்பின் பிரதிநிதி, சிவில் சமூகப் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் என 15 பேரைக் கொண்ட பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

# யாழ்.பல்கலையில் சங்காவுக்குச் சிலை

சிலை வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இது குறித்து பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் உட்பட நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, பல்கலைக்கழகத்தினுள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககாரவுக்கு சிலை அமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. சிலை அமைப்பதற்காக எவரும் அனுமதி கோரவில்லை. வளாகத்தினுள் சிலைகளை நிறுவுவதென்பது நீண்ட பொறிமுறைகளைக் கொண்டது. அவ்வாறான அனுமதி எதுவும் வழங்கவில்லை என்றும், ஊடகங்களின் வாயிலாகவே இதனைத் தாம் அறிந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மேற்குலக நாடுகளும் தொடர்ச்சியாக

நீண்ட காலமாக துன்புறுத்தப்பட்டு,கடைசியாக 2009 ஆம் ஆண்டு, தமிழ் இனத்தை இனப் படுகொலையாக அழித்த சம்பவங்கள் தொடர்ச்சியாக சர்வதேச நாடுகள் ஊடாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு வரும் என்று நம்புகின்றார்கள்.

ஆனால் சர்வதேச நாடுகளை பொருத்தவரையில் இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்காக தமிழர்களின் விடையங்களை பயன்படுத்தி, அமெரிக்கா போன்ற நாடுகள், இலங்கையை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்கு பகடைக்காயாக பயன்படுத்துவதாக நான் பார்க்கின்றேன்.

சர்வதேச விசாரணை வேண்டும் என்று தொடர்ச்சியாக தாயகம், புலத்தில் இருக்கின்ற சகல தரப்பினரும் ஒன்றிணைந்து ஒருமித்து கோரிக்கை முன் வைத்த போதும், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையை கையாளுகின்ற நாடுகள் ஒரு மென் போக்கை கடைபிடித்து வருகிறது.

தற்போது வந்துள்ள பரிந்துரையில் பல விடையங்கள் இருந்தாலும், தீர்மானம் ஒன்று நிறைவேறும் போது, பிரேரணை எந்தவித பயனும் இல்லாத ஒன்றாக காணப்படும்.

இலங்கை அரசாங்கம் ஐ.நாவில் எப்படியான தீர்மானங்களை நிறைவேற்றினாலும், இலங்கை அரசாங்கம் இவ்வளவு காலமும்,ஐ.நா.பரிந்துரைகளுக்கும்,தீர்மானங்களையும் நிறைவேற்ற எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. தற்போதைய பரிந்துரையின் போது அமைச்சர் அலி சப்ரி, அதற்கு உடன் படமாட்டோம் என்று கூறியிருக்கிறார்.

தொடர்ச்சியாக தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலையும்,மேற்குலக நாடுகளும் தமிழர் தரப்பை தொடர்ச்சியாக ஏமாற்றுகின்ற சூழ்நிலை தான் தொடர்ச்சியாக காணப்படுகின்றது– என அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு



களஞ்சியத்தின் விஸ்தீரணம்
1512 சதுர அடி.
நீளம் 42 அடி,
அகலம் 35 அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை
170 சதுர அடி.
குளியல் அறை,
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி ,
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)
அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல் போராட்டம் 49 நாள் நானாட்டானில்







( வாஸ் கூஞ்ஞ)

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் ?கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்? எனும் தொனிப் பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நோக்கி நடைபெற;;;று வரும் செயல் திட்டத்தின் 49 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் நானாட்டானில் ஞாயிற்றுக்கிழமை (18) காலை 10.30 மணி அளவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள் விவசாய அமைப்புக்கள் உட்பட பெண்கள் அமைப்புகள் சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள் என பலரும் இவ் கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டதுடன் வருகை தந்த பொது மக்களுக்கு அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான சாதக பாதக விளைவுகள் தொடர்பாக மன்னார் சட்டத்தரணி ரூபன்ராஜ் அங்கு கலந்து கொண்ட மக்களுக்கு தெளிவுபடுத்தனார். மேலும் கலந்து கொண்ட மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ கருத்துக்களை வழங்கியதுடன் அதே நேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள்வாங்கப்பட்டது.

குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கடலுக்குச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு



(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து (17) ஆம் திகதி இயந்திர படகில் மூன்று மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்.

இவ்வாறு சென்ற மூன்று மீனவர்களில் ஒருவர் நேற்று (18) கடலில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக அவருடன் சென்ற இரண்டு மீனவர்களும் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

கடலுக்குச் சென்று மரணமடைந்த நபர் மாவடிச்சேனை அஹமட் ஹிராஸ் வீதியைச் சேர்ந்த 48 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான இப்றாலெப்பை கலீல் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரணமடைந்த நபரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.நா.வில் பொத்துவில் கனகர் கிராம பிரச்சனை வெடித்தது!

## ஐ.நா.வில் மனித உரிமை செயற்பாட்டாளர் கல்முனை கணேஷ் முழக்கம்!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட கனகர் கிராமம் எனும் கிராமத்து மக்கள் கடந்த 1990 ம் ஆண்டு அக்கிராமத்தில் இருந்து வேறு கிராமங்களுக்கு தஞ்சம் புகுந்தனர் , ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை தங்களது சொந்த இருப்பிடம் செல்வதற்காக தொடர்ந்து 32 ஆண்டுகளாக போராடியும் இன்னும் பலனளிக்கவில்லை .இது அப்பட்டமான மனித உரிமை மீறல்.

இவ்வாறு ஜெனீவாவில் ஐ.நா.பிரதான மாநாட்டு மண்டபத்தில் உரையாற்றிய மாணவர் மீட்பு பேரவை தலைவரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான பொறியியலாளர் கலாநிதி செல்வராசா கணேஷ் தெரிவித்தார்.

191 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பேசிய

அவர் மேலும் தெரிவிக்கையில்...




புத்தர் சிலைகளை நட்டு தமிழர்களின் நிலங்களை அபகரிப்பு செய்கின்றனர் , அத்தோடு நான் வாழ்கின்ற இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள மாவட்டமாகிய அம்பாறை மாவட்டத்திலே பொத்துவில் பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட கனகர் கிராமம் எனும் கிராமத்து மக்கள் இலங்கை இராணுவத்தின் கெடுபிடி காரணமாக கடந்த 1990 ம் ஆண்டு அக்கிராமத்தில் இருந்து வேறு கிராமங்களுக்கு தஞ்சம் புகுத்தனர் , ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை தங்களது சொந்த இருப்பிடம் செல்வதற்காக தொடர்ந்தும் 32 ஆண்டுகளாக போராடி வருகின்றனர் , இலங்கை அரசோ தொடர்ந்தும் அவர்களின் அடிப்படை உரிமையை வழங்காது தடுத்து வருகின்றனர் இதிலே ஏறத்தாழ 700 ஏக்கருக்கும் மேற்பட்ட 300 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு தாங்களின் வாழ்வாதாரம், பிள்ளைகளின் கல்வி, போன்றவற்றை பெற்றுக் கொள்ள மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அத்தோடு இலங்கையின் கிழக்கேயுள்ள மட்டக்களப்பு எனும் மாவட்டத்தில் உள்ள , செங்கலடி பிரதேச செயலக எல்லைக்குப்பட்ட மயிலத்தமடு மாதவனை எனும் பிரதேசத்தில் தமிழ் மக்களால் தங்களது வாழ்வாதாரத்திற்கு என பயன்படுத்தப்படும் மேய்ச்சல் தரையினையை சிங்கள குடியேற்றம் செய்து வருகின்றனர் இதன் நிமித்தம் 400,000 க்கும் மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன, அத்தோடு இதே பிரதேச செயலக எல்லைக்குப்பட்ட கிராமத்தில் 1600 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை இராணுவம் அபகரித்துள்ளது.

அத்தோடு வெல்லாவெளி எனும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கெவுளியாமடு எனும் கிராமத்தில் உள்ள 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை இலங்கை அரசு அபகரித்துள்ளது, எனவே இனப் படுகொலையின் அங்கங்களாகவுள்ள இவ் பௌதீக வளங்கள் அபகரிப்பானது தொடர்ந்து செல்கின்றது எனவே மிக மோசமான இன அழிப்பை தமிழர்கள் மேல் இலங்கை அரசு மேற்கொண்டு வருகின்றது.

வலுக்கட்டாயமாக நிலம் கையகப்படுத்துவது குறித்து விசாரிக்க சிறப்பு அறிக்கையாளரை நியமிக்குமாறு ஐ.நா.வை வலியுறுத்துகிறோம். தமிழர்களுக்கு எதிராக குற்றங்களை இழைத்த போர்க்குற்றவாளிகளை அடையாளம் காண ஐ.நா.வை வலியுறுத்துகிறோம். அவர்கள் மீது ஐசிசி நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்யவும் வேண்டுகின்றோம், இறுதியாக உறுப்பு நாடுகள் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆம் அரசியல் தீர்வை வழங்க வேண்டும். சிங்கள அரசை தமிழர்கள் நம்ப மாட்டார்கள்.

எனவே சர்வதேசம் எமக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும். என்றார்.

இவரது இரண்டு நிமிட ஆங்கில உரை பலரையும் கவர்ந்தது.

# காணி விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடலும் களவிஜயமும்





(எப்.முபாரக்)

தம்பலகாமம் பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட வன பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கடவான ,அட்டவானை நிலப் பகுதிகளை விடுவித்து உரியவர்களுக்கு வழங்குவதற்கான ஆரப்ப கட்ட களவிஜயம் தம்பலாகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பிஎச்என்.ஜயவிக்ரம உட்பட வன ஜீவராசி பாதுகாப்பு,சுற்றாடல் , நில அளவை, காணி பயன்பாட்டு திணைக்கள உயரதிகாரிகளும் கலந்து கொண்டு காணி விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு இப்பகுதிகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பிலும் அப்பகுதி மக்களிடம் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டறிந்து கொண்டார்.

# சிறப்பாக நடைபெற்ற சம்மாந்துறை பத்திரகாளியம்மன் ஆலய பாற்குட பவனி!





( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்திற்கான பாற்குடபவனி, நேற்று (19) திங்கட்கிழமை ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

நேற்று கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி பிரதான வீதி வழியாக பத்திரகாளி அம்மன் ஆலயத்தை சென்றடைந்தது.

ஆலயத்தின் வருடாந்த உற்சவம் மற்றும் தீமிதிப்பு வைபவம் கடந்த17 ஆம் திகதி சனிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 நாட்கள் திருவிழாக்கள் இடம் பெற்று 26 ஆம் திகதி திங்கட்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவடைகிறது.

தினமும் பகல் 12 மணிக்கு மதிய பூஜையும் மாலை 6 மணிக்கு இரவு பூஜையும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஆலய பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்குகள் இடம்பெறுகின்றது

நேற்று 19ஆம் தேதி திங்கட்கிழமை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பால்குட பவனி இடம்பெற்றது.

23ஆம் தேதி வெள்ளிக்கிழமை வீரகம்பம் வெட்டல் அதனை தொடர்ந்து 25ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நோன்புக் கட்டல் சடங்கு இடம் பெறும்.

26 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஆராதனையும் தீமிதிப்பு வைபவமும் இடம் பெற இருப்பதாக ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார் .

வழமை போல அக்டோபர் 05 ஆம் தேதி கௌரி விரதம் இடம்பெறும்.

# மாகாண மட்ட எல்லே போட்டியில் பங்குபற்றும் வீரர்களுக்கான சீருடை அறிமுக நிகழ்வு



(குகதர்சன்)

மாவடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் இம்முறை மாகாண மட்ட எல்லே போட்டி நிகழ்ச்சிக்காக செல்லும் வீரர்களுக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு பாடசாலையில் இடம் பெற்றது.

பாடசாலை மாணவர் நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் அதன் பொறுப்பாசிரியர் ஏ.ஜி.அஸீஸுல் றஹீம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரி முதல்வர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக ஹயா இன்ரனஸனல் கலக்ஷன் நிறுவனம் மற்றும் ஹயா சமுகசேவை அமைப்பு ஆகியவற்றின்; பணிப்பாளர் ஏ.எல்.நஜிமுதீன் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் பகுதித் தலைவர்களான எம்.எல்.எம்.நஜீம் ஆசிரியர். யூ.எல்.எம்.றியாஸ், ஆசிரியர், ஜே.எம்.றிஸ்வான் ஆசிரியர், ஐ.அலாப்தீன் ஆசிரியர், எம்.ஐ.எம்.முஸம்மில் ஆசிரியர் ஆகியோரும்; கலந்து கொண்டனர்.

மாணவர்களை எல்லே விளையாட்டுப் போட்டிக்காக பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.முஹமட் ஜிப்ரியை கல்லூரி முதல்வர் மற்றும் பாடசாலை சமுகத்தினால் பாராட்டப்பட்டதோடு, விளையாட்டு வீரர்களுக்கான புதிய சீருடைக்கான அனுசரனை வழங்கிய ஹயா இன்ரனஸனல் கலக்ஷன் நிறுவனம் மற்றும் ஹயா சமுகசேவை அமைப்பு ஆகியவற்றின்; பணிப்பாளருமான ஏ.எல்.நஜிமுதீனின் சேவையை பாராட்டி கல்லூரி முதல்வரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

# ஒலுவில் துறைமுகத்தில் தனியார் தொழிற்சாலைக்கு இடமளிக்க வேண்டாம்

## மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை







(ஏ.எம்.ஆஷிப்)

மீன்பிடித் துறைமுகமாக மாற்றப்பட்டுள்ள ஒலுவில் துறைமுகத்தில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்துள்ளோம். இம்முடிவை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

02 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் பொது நூலக கட்டடத் திறப்பு விழா சனிக்கிழமை (17) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் எம்.அமானுல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது;

அம்பாறை மாவட்டத்தில் மூன்று சமூகங்களும் ஒற்றுமையாக வாழந்து வருகின்றனர். ஆனால் சில இனவாதிகள் இன முறுகல்களை ஏற்படுத்துவதற்கு எத்தனித்து வருகின்றார்கள். இதனை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முறியடித்து, சுமூகமான நிலையை ஏற்படுத்தி வருகின்றது. ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அவசரத் தீர்வு காணுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அதேவேளை ஒலுவில் துறைமுகத்தை துறைமுக அதிகார சபையினர் மீன்பிடித் துறைமுகமாக மாற்றி, மீன்பிடித் துறைமுக திணைக்களத்துக்கு ஒப்படைத்துள்ளனர். இதில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இதனை மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீளாய்வு செய்ய வேண்டுமென அவரிடம் கோரிக்கை விடுத்திருக்கிறோம்- என்றும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

# பாவற்குளத்தில் பாலர் பாடசாலை கட்டிடத் திறப்பு விழா!





அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில், வவுனியா, பாவற்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை கட்டிடத் திறப்பு விழா (18) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டதுடன், அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பிலும் பங்கேற்றிருந்தார்.



**மறைந்த கல்முனை மாநகர சபை உறுப்பினரான அமரர் புவனேஸ்வரி விநாயகமூர்த்தியின் இல்லம் சென்று, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. இறுதி மரியாதை செலுத்துவதைக் காணலாம்.**

**(படம்: அஸ்லம் எஸ்.மௌலானா)**

# கருமலையூற்று கடற்கரை எல்லைப் பிரச்சினை:

## விமானப் படையினருடன் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பவ இடத்திற்கு விஜயம்



(எப்.முபாரக்)

திருகோணமலை கருமலையூற்றுக் கடற்கரைப் பிரதேசத்தில் விமானப் படையினரால் இடப்பட்டுருக்கின்ற எல்லை வேலியினால் அப்பிரதேச மீனவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சீனக்குடா விமானப்படைத் தளபதி அசேல ஜெயசேகரவுடன் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், மற்றும் அதிகாரிகளுடன் உரிய பகுதிக்கு விஜயம் செய்து மீனவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்கள்.

இதன் எல்லைப்பகுதி மற்றும் வேலிகள் அமையப்பெற்றுள்ள விதம் தொடர்பாகவும் பேசப்பட்டது.

இவ்வேளையில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம். பஸீர், விமானப்படை அதிகாரிகள் மற்றும் மீனவர்காளும் கலந்து கொண்டார்கள்.

# மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தினை கட்டியெழுப்புதல்; இரண்டுநாள் செயலமர்வு



(வி.சுகிர்தகுமார்)

இனங்களுக்கிடையிலான நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பான செயற்திட்டத்தின் ஊடாக இளையோர்கள் மத்தியில் இன நல்லிணக்கம் சார்ந்து அவர்களுடைய பங்களிப்பினையும், ஒத்துழைப்பினையும் மேம்படுத்துவதற்கான நிகழ்வினை அக்கரைப்பற்று பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இதற்கமைவாக மனித உரிமைகள் மற்றும் சமாதானத்தினை கட்டியெழுப்புதல் என்னும் தலைப்பில் இளைஞர்கள் மற்றும் சமய, சமூக தலைவர்களையும் உள்வாங்கியதான சமாதானம்,சகவாழ்வு தொடர்பாக இரண்டுநாள் செயலமர்வு நேற்றும் இன்றும் அக்கரைப்பற்று சுவாட் மண்டபத்தில் நடைபெற்றது.

பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் மத்திய செயற் குழு தலைவியும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளருமான செல்வி அனுசியா சேனாதிராஜா, மற்றும் திட்ட இணைப்பாளர் நடராஜா சுமந்தி, திட்ட பொறுப்பாளர் செல்வபதி கங்கேஸ்ரி ஆகியோரின் ஒருங்கிணைந்த தலைமையின் கீழ் நடாத்தப்பட்ட செயலமர்வில் ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று பொத்துவில் இறக்காமம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த தமிழ்,சிங்கள முஸ்லிம் இளைஞர் யுவதிகள் மற்றும் சமய சமூக தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வின் வளவாளராக கனகசபை வன்னிரமா கலந்து கொண்டு பயற்சியினை வழங்கி வைத்ததுடன் தமிழ் சிங்கள மொழிபெயர்ப்பாளராக ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தர்; இ.குலசேகரம் கலந்து கொண்டார்..

குறிப்பாக எதிர்காலத்தில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல், முரண்பாடுகளை அடையாளம் காணுதல்; அவற்றிற்கான தீர்வினை பெற்றுக்கொடுத்தல் எதிர்காலத்திற்கு தேவையான தலைமைத்துவங்களை உருவாக்குதல் போன்ற பயிற்சிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இச்செயற்பாடுகளானது எதிர்காலத்திலும் பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் கலந்து கொண்டவர்கள் தங்களது கருத்துக்களையும் முன்வைத்தனர்.

# செய்தியால் பலன்!; மக்கள் மகிழ்ச்சி!

## பிரதேச செயலாளரின் முன்மாதிரியான முயற்சி தங்கவேலாயுதபுரம் பாதை செப்பனிடப்படுகிறது!

(வி.ரி.சகாதேவராஜா)



தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பிரதான பாதை மிக மோசமாக பாதிக்கப்பட்டு குன்றும்குழியுமாக இருப்பதால் அங்கு சேவையிலீடுபட்டவந்த ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது என்ற செய்தி எமது பத்திரிகையில் வெளிவந்து மூன்று தினங்களுக்குள் அதற்காக பலன் கிடைத்துள்ளது .

ஆம் எமது செய்தியை கண்ணற்ற திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்கள மாகாண பணிப்பாளர் எந்திரி என்.கருணைநாதன் ஆகியோர் உடனடியாக செயல்பட்டு 12கிலோமீட்டர் நீளமான அப்பாதை புனரமைப்பு பணிகளை ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையில் எவரும் எதிர்பாராத வகையில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் அதிரடியாக தமது குழுவினருடன் களத்தில் இறங்கினார்.

பலனாக தங்கவேலாயுதபுரம் பகுதியில் இருக்கக்கூடிய சமூக அமைப்புகளை அழைத்து அவர்களிடம் இருந்து நிதி உதவி மற்றும் ஒத்துழைப்பை பெற்று இந்த பாதை செப்பனிடும் பணியை ஆரம்பித்து இருக்கின்றார்.

இதற்கு தங்கவேலாயுதபுரம் தாண்டியடி கஞ்சிகுடிச்சாறு ஆகிய பிரதேச விவசாய அமைப்புகள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மகளிர் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகிய பொது அமைப்புகளை அழைத்து கலந்துரையாடினார். அவர்கள் இப் பாதை புனரமைப்பிற்கு தேவையான அத்தனைக்கும் ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்தனர்.

அவர்கள் வழங்கிய நிதியுதவியில் இருந்து முழுதாக டீசலைக் கொள்வனவு செய்தார்கள்.

அடுத்து திருக்கோவில் பிரதேச சபையிடமிருந்து ஜேசிபி இயந்திரம் மற்றும் கல் குவாரி போன்ற இடங்களில் இருந்து உளவு இயந்திரங்களையும் பெற்று மக்களின் ஒத்துழைப்போடு இந்த வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றது. அங்குள்ளே கல்குவாரி உரிமையாளர்கள் இலவசமாக முப்பது லோட் கல் கிறசர் தூள்களை வழங்கி வைத்தார்கள்.

இது போன்று ஏனைய சில நிறுவனங்களும் தனவந்தர்களும் தாமாக முன்வந்து இந்த பொதுப்பணிக்கு உதவினார்கள்.

மொத்தத்தில் மக்களின் அவல நிலையை கருத்தில் கொண்டு வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் அத்தனை வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் இந்த வீதியை செப்பனிட்டு அந்த பின்தங்கிய கிராம மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வருவது கண்டு பலரும் பாராட்டி வருகின்றனர்.

# இன்று பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மஹா மகோற்சவப் பெருவிழா ஆரம்பம்

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை ,பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த மஹா மகோற்சவப் பெருவிழா இன்று (20) செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை திருக்கதவு திறத்தலும்,கடலுக்குச் சென்று ஆராதனை செய்து ஊர் ஆராவாரம் பண்ணி ஊர்வலம் வருதலுடன், ஆராதனையுடன் கொடியேற்றலும் இடம் பெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை இரவு சுவாமி எழுந்தருளப்பண்ணல் இடம் பெறும். மறுநாள் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை நாட்கள் வெட்டுதல்.

அதேவேளை, அக்டோபர் 01ஆம் திகதி சனிக்கிழமை மாலை கல்யாணக் கால் வெட்டுதலும்,ஊர்வலமும் இடம் பெறும்.

05ஆம் திகதி புதன்கிழமை வாள் மாற்றுதலும்,பரந்தாமன் பஞ்சபாண்டவர் ஸ்ரீ திரௌபதா தேவி சகிதம் வனவாசம் செல்லுதலும்,அதைத்தொடர்ந்து அஞ்ஞாத வாசம் செய்தலும் இடம் பெறும்.

06 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு அருச்சுனர் பாசுபதம் பெறத்தவம் செய்தலும்,அரவானைக் களப்பலியிடலும் இடம் பெறும்.

07ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை வீரகும்பம் நிறுத்தலும்,தீ மூட்டுதலும்.பிற்பகல் கடல் குளித்தலும்,மஞ்சள் குளித்தலும், அதனைத் தொடர்ந்து தீ மிதித்தல் வைபவம் நடைபெறும்.


மறுநாள் 8 ஆம் திகதி சனிக்கிழமை பகல் பாற்பள்ளயமும்,தருமர் முடி சூட்டு வைபவமும்,வாழிபாடுதலும். இரவு அம்மனின் ஊர்வலத்துடன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை வந்தடைதலும் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

# ஹட்டன் ஹைலன்ஸ்ட் கல்லூரி பரதார்ப்பணம் நாட்டிய சஞ்சிகை முகிழ்வு
























ஹைலன்டஸ் கல்லூரியின் 130 உன்னத வரலாற்றில் மற்றுமொரு பரிணாமமாய் எமது கல்லூரியின் நாட்டிய பிரிவு மாணவர்களின் 'புரதார்ப்பணம்' என்ற சஞ்சிகை கடந்த அண்மையில் எமது பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு எமது கல்லூரியின் முதல்வர் திரு ஸ்ரீதர் ஐயா தலைமையில் இடம்பெற்றது. நாட்டிய பிரிவின் ஆசிரியை திருமதி பிரதீபா அசோக் குமாரின் வழிகாட்டலில் இந்நிகழ்வு இடம்பெற்றது.




# வரலாறு கூறும் நற்பிட்டிமுனை நூல் வெளியீட்டு விழா

**( வி.ரி சகாதேவராஜா)**

நற்பிட்டிமுனையைச் சேர்ந்த எழுத்தாளர் எஸ்.சிவகுருநாதன் எழுதிய 'வரலாறு கூறும் நற்பிட்டிமுனை' எனும் வரலாற்று நூல் வெளியீட்டு விழா, ஞாயிற்றுக்கிழமை(18) மாலை நற்பிட்டிமுனை சிவசக்தி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கல்முனை வலய ஓய்வு நிலை கணிதபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். இலங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் பிரதம அதிதியாக கல்முனைவடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார்.

முன்னதாக ,அதிதிகள் மலர்மாலை அணிவித்து பாண்ட் வாத்தியத்துடன் வரவேற்று, மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை என்பனஇடம் பெற்றன.

இவ் விழாவில் , நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசராலயம் மற்றும் சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய தலைவர் தம்பிராஜா ரவிராஜ், சிவசக்தி மகாவித்தியாலய அதிபர் திருமதி. யோகேஸ்வரி இராமநாதன், மற்றும் ஸ்ரீ பாத தேசிய கல்வியல் கல்லூரி பீடாதிபதி கே. துரைராஜசிங்கம்,கிராமிய தொழில் துறைத் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும் , இவ் விழாவில் நற்பிட்டிமுனை ஆலய தலைவர்கள், அதன் உறுப்பினர்கள், பிரதேச பொதுமக்கள், சமூக சேவையாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.நூல் தொடர்பான மதிப்பீட்டு உரையினை தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதி பதிவாளர் சஞ்சீவி சிவகுமார் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து வருகைதந்த அதிதிகளுக்கு நூல் பிரதிகளை நூலாசிரியர் எஸ். சிவகுருநாதன் வழங்கி வைத்தார்.





# ஐம்பதாவது நாளாகிய நேற்று திருமலை கடற்கரையில் மக்கள் குரல்

(அ . அச்சுதன்)

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஒழுங்கு படுத்தலுடன்,அதன் ஒருங்கிணைப்பாளர் க.லவகுசராச தலைமையில் கடந்த ஆவணி முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் 100 நாட்கள் செயல் முனைவின் 50வது

நாள் இன்று (19) திருகோணமலை கடற்கரை முன்றலில் இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வுகளை கோரிய பதாகைகள் மற்றும் கோஷங்களை உள்ளடக்கிய வகையிலான ஐம்பது பாரியளவான பட்டங்கள் ஏற்றி வெளிப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு 100 நாட்கள் செயல்முனைவு தொடர்பில் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர்.

அறிக்கையில் நாங்கள் நாட்டை துண்டாடவோ, தனியரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்.

13-வது திருத்தச்சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துகின்றது.

இலங்கையில் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகளின் இனவாத கொள்கைகளால் பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்டு வந்துள்ளோம். இது இன்றுவரை தொடர்கின்றது இதுவே தமிழ் பேசும் மக்கள் தமக்கான அரசியல் தீர்வு மட்டும் அதிகார பரவலாக்கும் குறித்து சிந்திக்க வேண்டிய விடயமாக வளர்ச்சியடைந்துள்ளது.

குறித்த விடயத்தின் நியாயத் தன்மையை அண்டை நட்பு நாடான இந்தியாவும், சர்வதேச நாடுகளும் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளன.

இவற்றின் விளைவுகளாகவே இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் அதிகார பரவலாக்கும் சார்ந்து இந்தியா இலங்கை அரசுடன் செய்து கொண்ட 1987இல் இலங்கை இந்தியா ஒப்பந்தம் மற்றும் 1999 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் நோர்வே நாட்டின் மத்தியதுவம் மற்றும் 2022 ஆம் ஆண்டில் சமாதானம் புணர்வாழ்வு,மற்றும் மீள்கட்டுமானம் சார்ந்த பங்களிப்பை செய்வதற்கு ஜப்பான் நாட்டின் அமைச்சரவை திரு யசூசி அகாசி அவர்களை இலங்கைக்காக நியமித்தவை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

1987 இன் பின்னர் இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் எதுவுமே அதிகார பரவலாக்கத்தை நிராகரிக்கவில்லை விரும்பியோ விரும்பாமலோ அவர்கள் அதிகார பரவலாக்கும் சார்ந்த உரையாடலை மேற்கொள்ள வேண்டிய நிலையே காணப்பட்டது.

1987 முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக அதிகார பரவலாக்கத்திற்கான 13வது திருத்தச் சட்டத்தை அரசியலமைப்பிலே கொண்டு வந்தார்.

அதைத்தொடர்ந்து 1990 ஆம் ஆண்டுகளில் அப்போதைய ஜனாதிபதி ரரண்ணிங்க பிரேமதாச அரசியல் தீர்வுக்கான திட்டங்களை முன் வைத்தார் அவரின் காலத்தில் அதாவது 1991களில்

திரு.மங்களமுனசிங்க தலைமையில் 45 பேர் கொண்ட பாராளுமன்ற தேர்வு குழு அமைக்கப்பட்டு அங்கு தீர்வு திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் போது வடக்கு கிழக்கு மாகாண பொதுமக்கள்,கிராம அடிப்படை அமைப்புக்கள்,விவசாய,மீனவ சங்கங்கள்,பெண்கள் அமைப்புக்கள்,மணவ மற்றும் சிவில் அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டு தமக்கான உரிமைகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்ததுடன் சிறந்த தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் இதன்போது கேட்டுக் கொண்டனர்.








# ஏறாவூர் இ.போ.ச டிப்போவினால் தூர இடங்களுக்கான பஸ் சேவைகள்!

## டிப்போ முகாமையாளர் மொஹமட் ஸெய்னி கூறுகிறார்

( வி.ரி சகாதேவராஜா)

மட்டக்களப்பு பிரதேசத்தில் இருந்து கொழும்பு செல்கின்ற பயணிகளின் நீண்ட கால கோரிக்கையையடுத்து, இலங்கை போக்குவரத்து சபையின் ஏறாவூர் பஸ் டிப்போவினால் புதிய பஸ் சேவையொன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக டிப்போ முகாமையாளர் மொஹமட் ஸெய்னி தெரிவித்தார்.

மேற்படி இ.போ.ச பஸ் தினமும் காத்தான்குடியில் இருந்து இரவு 10 மணிக்கு கொழும்பை நோக்கி புறப்படுகின்றது. அதே பஸ் மறுநாள் இரவு 7 மணிக்கு கொழும்பு பிரதான பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு கல்முனை வரை செல்கின்றது. இந்த இரவு நேர பஸ் சேவையினால் மிகுந்த நன்மையடைவதாக பயணிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இ.போ.சவின் ஏறாவூர் டிப்போவினால் தூர இடங்களுக்கான மேலும் பல பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருவதாக முகாமையாளர் மொஹமட் ஸெய்னி தெரிவித்தார்.

ஏறாவூரில் இருந்து தினமும் அதிகாலை 5.15 இற்கு கொழும்புக்கான சேவை நடத்தப்படுகின்றது. அந்த பஸ் இரவு 11 மணிக்கு கொழும்பு பஸ்நிலையத்திலிருந்து காத்தான்குடிக்குப் புறப்படுகின்றது.

ஏறாவூரில் இருந்து அதிகாலை 4.15 இற்கு வவுனியாவுக்கான பஸ் சேவை நடத்தப்படுகின்றது. வவுனியாவில் இருந்து காலை 11 மணிக்கு கல்முனை வரையான சேவை நடைபெறுகின்றது.

ஏறாவூரில் இருந்து தினமும் காலை 6.15 இற்கு புத்தளத்துக்கான சேவை நடைபெறுகின்றது. அந்த பஸ் மறுநாள் காலை 7 மணிக்கு புத்தளத்திலிருந்து புறப்படும்.

காத்தான்குடியிலிருந்து காலை 7 மணிக்கு கட்டுநாயக்கவுக்கான பஸ் சேவை நடைபெறுகிறது. கட்டுநாயக்கவிலிருந்து காலை 8 மணிக்கு கல்முனை நோக்கி அந்த பஸ் புறப்படுகிறது. அதேவேளை கல்முனையில் இருந்து காலை 9 மணிக்கு கட்டுநாயக்கவுக்கான பஸ் சேவையையும் ஏறாவூர் டிப்போ நடத்துகின்றது.

ஆசனப்பதிவுகளை ஒன்லைன் ஊடாக மேற்கொள்ள முடியுமெனவும் முகாமையாளர் தெரிவித்தார்.

# வட, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்

## 50 வது நாளான இன்று வானில் பட்டம்விட்டு கோரிக்கை






(திருக்கோவில் நிருபர்- எஸ்.கார்த்திகேசு)

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் 50வது நாளான நேற்று வானில் பட்டம்விட்டு கோரிக்கை

வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் என கோரிக்கை விடுத்து 100 நாட்கள் செயல் முனையின் ஊடாக வடக்கு கிழக்கு வாழ் பொது மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இன்று திருக்கோவில் விநாயகபுரம் கடற்கரையில் வானில் பட்டம் விட்டு கோரிகை விடுத்துள்ளனர்

இப் பட்டம் விடும் நிகழ்வானது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் திருக்கோவில் விநாயகபுரம் கடற்; கரையில் இன்று நண்பகல் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

இதன்போது நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசோ கேட்கவில்லை. நாட்டுக்குள் கௌரவமான உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கின்றோம். மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும். 13வது திருத்தச் சட்டமானது அரசியல் அமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்கத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.

போன்ற கோரிக்கைகளை முன்னிருத்தி தொடர்ச்சியாக வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இவ்வாறான கவனயீர்பபு ஆர்ப்பாட்டப் பேரணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இன்று அம்பாரை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் கடற்கரையில் வானில் பட்டம் விட்டு தமது கோரிக்கை போராட்டத்தினை உலகறியும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆர்ப்பாட்ட பேரணியில் வடக்கு கிழக்கு வாழ் பொது மக்கள் கிராம அடிப்படை அமைப்புக்கள் விவசாய மீனவ சங்கங்கள் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் மாணவ அமைப்புக்கள் சிவில் அமைப்புக்கள் என்ப ஒன்றினைந்து இவ் பேரணியை நடாத்தி இருந்தன.

# கந்தளாயில் விஞ்ஞான பிரிவில் பல்கலைக்கழகம் தெரிவான மற்றும் அதிகூடிய பெறுபேறுகள் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

(எப்.முபாரக்)

கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட

கந்தளாய் தி/அல்தாரிக் தேசிய பாடசாலையின் இவ்வருடம் முதல் தடவையாக விஞ்ஞான பிரிவில் பல்கலைக்கழகம் தெரிவான மற்றும் அதிகூடிய பெறுபேறுகள் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை(20) பி. ப 3.00 மணிக்கு பாடசாலையின் முதல்வர் ஐ.எம். தௌபிக் அவர்களின் தலைமையில் அல் தாரீக் தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் மிகவும் விமர்சையாக இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.இ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்கவும், விசேட அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் என்.புள்ளைநாயகம், மற்றும் கௌரவ அதிதியாக கந்தளாய் வலயக் கல்விப் பணிப்பாளர் இ.ஜி.ஐ.பி.தர்மதிலக்கவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன் போது கந்தளாய் மண்ணிலிருந்து முதல் தடவையாக வைத்தியத்துறைக்கு தெரிவான மாணவியொருவரும் கௌரவிக்கப் படவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.?

# திருமலை மாவட்ட எழுத்தாளர்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் புறக்கணிப்பு

## எழுத்தாளர் கவலை தெரிவிப்பு

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எழுத்தாளர்களுக்கான செயலமர்வு சனிக்கிழமை (17) கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதில் அதிகமான எழுத்தாளர்களை புறக்கணித்துவிட்டு தமக்கு வேண்டிய பத்து எழுத்தாளர்களை வைத்து செயலமர்வினை அரக்கேற்றியுள்ளதாக பாதிக்கப்பட்ட எழுத்தாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் பதினொரு பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கி முப்பதிற்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் இருக்கையில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பத்துப் பேரை தெரிவு செய்து கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரண்யா சுதர்சன் செயலமர்வினை மேற்கொண்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டுள்ள எழுத்தாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் அதிகமான எழுத்தாளர் கிராமப் புறங்களில் இருப்பதாகவும் திருகோணமலை நகரிலுள்ள தமக்கு வேண்டிய பத்து பேருக்கு செயலமர்வு நடாத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்டுள்ள எழுத்தாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இச்செயலமர்வில் முஸ்லிம் எழுத்தாளர்களை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் புறக்கணித்துள்ளதாகவும்,முஸ்லிம் எழுத்தாளர்கள் தெரிவிக்கின்றனர். ஊடகவியலாளர்களும் எழுத்துதுறையோடு தொடர்பானவர்கள்,தினமும் செய்திகளை தேடி மக்களுக்கு உண்மைத் தன்மைகளை வெளிக்கொண்டு வருபவர்கள்,புத்தகங்கள் எழுதுபவர்களை மாத்திரம் அழைத்து பெறுமதியான செயலமர்வினை பணிப்பாளர் செய்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டுள்ள எழுத்தாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் எழுத்தாளர்களுக்கிடையில் குரோத தன்மைகளை ஏற்படுத்த பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளதாகவும்,இவ்விடயத்தில் கிழக்கு மாகாண ஆளுனர் தலையிட்டு இனிவரும் செயலமர்வில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களை இணைத்து செயற்படுத்த வேண்டும் எனவும் பாதிக்கப்பட்டுள்ள எழுத்தாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்தோடு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடமையாற்றிய முன்னால் பணிப்பாளர்கள் இவ்வாறு தன்னிச்சையான செயற்பாடுகளில் ஈடுபடவில்லையெனவும் பாதிக்கப்பட்டுள்ள எழுத்தாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# இன கலாசார வரலாற்று ஆதார அழிப்புகள் நிலப்பறிப்புகள் ஊடாக தமிழினத்தை ஒடுக்க நினைக்கும் சிங்கள பௌத்த மேலாதிக்க அதிகார வர்க்கம்



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இன்றுவரை தமிழர்களின் தாயக நிலத்தைச் சிதைத்து சின்னாபின்னப்படுத்துவதற்கு சிங்கள பௌத்த அதிகாரவர்க்கம் நுட்பமாகச்செயற்பட்டு வருகின்றது.இன்றைய நிலையில் வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான 18 ஏக்கர்களுக்கும் சற்று அதிகமான காணியினைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.சம்பந்தரால் தேவாரப்பாடல் பெற்ற ஆலயத்தின் காணியை,சம்பந்தர் ஐயா திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற காலத்தில் அபகரிக்க முயற்சிப்பது இரட்டிப்பான வேதனைகளை தமிழர்களுக்கு அளிக்கின்றது.இதனைத் தடுப்பதற்காக திருக்கோணேஸ்வர ஆலய அறங்காவலர்கள்,சைவப்பெருமக்கள்,தமிழ்ப்பற்றாளர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்கள்.அதற்கான அரசியல் பலத்தினை தமிழ் அரசியல்வாதிகள் கொடுக்க வேண்டியது தார்மீகப்பொறுப்பாகும்.குறிப்பாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஐயா இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டியவராக உள்ளார். அதற்கான கடிதங்களை ஜனாதிபதிக்கு சம்பந்தர் ஐயா அனுப்பியுள்ளார்.மேலும் இந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகின்ற தமிழ் அமைச்சர்கள்,இராசாங்க அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்கள்தடுத்து நிறுத்தியேயாக வேண்டும். கிழக்கிருப்புவாதிகள் என்று மார்தட்டுவோர் திருகோணமலையும் கிழக்கு மாகாணத்திற்குரியது என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.கிழக்கின் இராசாங்க அமைச்சர்கள் தமது ஊருக்குள் தொகுதிகளுக்குள் மாவட்டத்திற்குள் மாத்திரம் என்று தமது பாரிய பொறுப்புகளைச் சுருக்கக் கூடாது.அவர்கள் சார்ந்த இந்த அரசாங்கம் அமைச்சுகளைத் தமக்குத் தந்ததால் நன்றியணர்வோடு கைகளை உயர்த்தித் தலைகளை ஆட்டும் பொம்மையர்களாக இருக்கக்கூடாது. 'எம் கடன் தலையாட்டிக் கையுயர்த்திச் சலுகைகளை அனுபவிப்பது மட்டுமே' என்ற தாரகமந்திரத்தோடு இவர்கள் செயற்படக்கூடாது.இதனை மக்கள் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. 'பேச்சுப் பல்லக்கில் தம்பி கால்நடையில்' எனபதாக செய்கைகள் இப்படியே இருக்கக்கூடாது. பேரின அடிப்படைவாத அதிகாரவர்க்க ஆட்சிக்காலங்களில் தமிழின அழிப்புகள்,உடைமை அழிப்புகள்,தாயக நிலப்பறிப்புகள்,கலாசார அடையாள அழிப்புகள்,வரலாற்றுத்தடய அழிப்புகள்,நினைவுத்தூபி அழிப்புகள்,உணர்வு அடக்குமுறைகள் போன்றவையே நடைபெறகின்றன.

இனஅழிப்புகளுக்கு 1958,1977,1983,2009 போன்ற பல காலங்களில் நடைபெற்ற கொடூரஅழிப்புகள் எடுத்துக்கட்டுகளாக உள்ளன.இவ்வன்முறைகளால் அழிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இதுவரை உள்நாட்டுப்பொறிமுறைகளால் நீதி வழங்கப்படவில்லை.ஆனால் தம்மிடம் உள்நாட்டுப்பொறிமுறை இருப்பதாக 2009 இல் இருந்து இன்றைய வெளிநாட்டமைச்சர் அலிசப்ரி வரை ஐக்கிய நாடுகள் சபையினை ஏமாற்றி வருகின்றனர்.தமிழர்களை ஏமாற்றி முஸலிங்களை ஏமாற்றி சிங்களவர்களை ஏமாற்றி சர்வதேச சமூகத்தையே ஏமாற்றக்கூடிய நிலைக்கு 'ரீலங்கா ஆட்சியாளர்கள் வந்துள்ளார்கள்.சர்வதேச ஐக்கிய நாடுகள் சபையும் ஏமாந்து விடக்கூடாது என்பதே தமிழர்களின் ஏகோபித்த கோரிக்கையாகும்.

தாய்மண்ணில் தமிழர்களின் குடித்தொகையை குறைப்பதற்கு அச்சுறுத்தல் அழிப்பு உத்திகளைக் கையாளும் சிங்கள அதிகார வர்க்கமானது அதன் மூலமாக தமிழர்களை அகதிகளாக்கி ஏறத்தாழ 13 இலட்சம் தமிழர்களை நாட்டை விட்டு வெளியேறச்செய்துள்ளது.இறுதி யுத்தத்தின் பின்னரும் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் நாட்டை விட்டு அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்வதற்கு ஆளும் கட்சியில் இருந்த சக்தி வாய்ந்த இளவல் பின்னணியாக இருந்ததாகக் கூறப்படுகிறது,இவருக்கு முகவர்களாக தமிழ்ப்பினாமிகள் இருந்துள்ளார்கள்.இதனால் அதிகார இளவல் கறுப்புமணம் உழைத்ததோடு மட்டுமல்லாமல்,தாய்மண்ணில் தமிழர்களின் எண்ணிக்கையினையும் குறைத்துள்ளதாக நம்பப்படுகிறது. அதாவது குறுக்கு வழியில் அரசியல் பொருளாதார நன்மைகள் அதிகார வர்க்கத்திற்கும் அதிகார இளவலுக்கும் கிடைத்துள்ளன.குறித்த தமிழ்ப்பினாமிகள் பின்னர் ஆளும் கட்சி வேட்பாளர்களாகவும் தேர்தலில் குதித்திருந்தனர்.

> **தாய்மண்ணில் தமிழர்களின் குடித்தொகையைக் குறைப்பதற்கு அச்சுறுத்தல் அழிப்பு உத்திகளைக் கையாளும் சிங்கள அதிகார வர்க்கமானது அதன் மூலமாக தமிழர்களை அகதிகளாக்கி ஏறத்தாழ 13 இலட்சம் தமிழர்களை நாட்டை விட்டு வெளியேறச் செய்துள்ளது.இறுதி யுத்தத்தின் பின்னரும் பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் நாட்டை விட்டு அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்வதற்கு ஆளும் கட்சியில் இருந்த சக்தி வாய்ந்த இளவல் பின்னணியாக இருந்ததாகக் கூறப்படுகிறது,இவருக்கு முகவர்களாக தமிழ்ப்பினாமிகள் இருந்துள்ளார்கள். இதனால் அதிகார இளவல் கறுப்புமணம் உழைத்ததோடு மட்டுமல்லாமல், தாய்மண்ணில் தமிழர்களின் எண்ணிக்கையினையும் குறைத்துள்ளதாக நம்பப்படுகிறது.**

தமிழர்களின் இருப்பை இழக்கச்செய்வதில் இன்னுமோர் அதிகார உத்தி தமிழர்தாயக நிலங்களைசட்டரீதியாகவும் சட்ட விரோதமாகவும் அபகரிப்பதாகும்.இதற்கானசட்டரீதியான உத்திகளாக இருப்பது அபிவிருத்தி,விவசாக்குடியேற்றம்,பாதுகாப்பு,உல்லாசப்பயணத்துறை அபிவிருத்தி போன்ற தந்திரோபாயங்களாகும்.அதற்குரிய நுட்ப நடைமுறைகளாக மகாவலி அபிவிருத்தி,வனவளப்பாதுகாப்பு,வனசீவராசிகள் பாதுகாப்பு,கரையோரப் பாதுகாப்பு,தொல்லியல் பாதுகாப்பு,அரசகாணிகள்,காணிச் சீர்திருத்தம்,எல்லை மீள்நிருணயம்,கடலோரம் இல்லாத மாவட்டங்களுகளைக் கடற்கரைகளோடு இணைத்தல் போன்றவை அமைகின்றன.இவற்றை விட சட்ட விரோதமான முறையிலும் குண்டர்களின் அச்சறுத்தல் இனவழிப்புகள் மூலமாக தமிழர்களின் உறுதிக்காணிகள் ஒப்பக்கணிகள் பறிக்கப்படுகின்றன.இதற்கு தமிழர்கள் மீதான சிங்கள அதிகார தரப்பினரதும் கையாட்களினதும் வன்செயல்கள் உதவுகின்றன.தென்னலங்கையிலுள்ள தமிழர்கள் மட்டுமன்றி வடக்கு கிழக்கு மாகாணங்களின் எல்லைக் கிராமங்களின் மக்களும் அழிப்புகள் அச்சுறுத்தல்களால் அகற்றப்பட்டுள்ளனர்.கல்லோயா,அல்லை கந்தளாய்,சேருவில,வெலிஓயா,பதவியா,சிறிபுர,லங்காபட்டுன போன்ற பெயரகள் சிங்களப்பேரினவாத அபகரிப்புகளின் சான்றுகளாகும்.

இரண்டரை ஆண்டுகள் கால ராஜபக்சக்களின் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பில் மயிலத்தமடு,மாதவண,கெவுளியாமடு,வடமுனை நெளுக்கல்மலை,வாகரை காரக்காடு போன்ற இடங்கள் ஆக்கிரமிப்பை எதிர்கொண்டுள்ளன.கரடியனாறு குசலானமலை முருகன் கோவில்,வேலோடுமலை,தாந்தாமலை,கன்னியா,திருக்கோணேஸ்வரர் ஆலயக்காணி,முல்லைத்தீவில் வெடுக்குநாறிமலை ஆலயம்,குருந்தூர்மலை ஆலயம் போன்றவை சிங்கள பௌத்த தொல்லியல் ஆக்கிரமிப்புப்புக்குள் அல்லது பார்வைக்குள் உட்பட்டுள்ளன.இவற்றை விடவும் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் முப்படைகளுக்கும் வேண்டிய காணிகள் என்ற அடிப்படையில் பல நூற்றுக்கணகான ஏக்கர் காணிகள் ஆக்கிரமிக்கபடுகின்றன.



மகாவலி அபிவிருத்தி அமைச்சின் சீழ் இயங்கும் மகவலி அபிவிருத்தி அதிகாரசபையானது இனவிகிதாசார அடிப்படையில் காணிகளைப் பகிர்வதாக்க் குறிப்பிட்டாலும் இதுவரை வழங்கப்பட்ட காணிகளில் 74 சதவீதமான சிங்களவர்களுக்கு 96 சதவீதத்திலும் அதிகமான காணிகள் வழங்கப்பட்டுள்ளன.19 சதவீத்த்திலும் அதிகமாகவுள்ள தமிழரகளுக்கு 1 சதவீதமான காணிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.7 சதவீதமாகவுள்ள முஸ்லிங்களுக்கு 2 சதவீதமான காணிகள் அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.இப்படியான பாரபட்சம் ஒரு புறமிருக்க,வடக்கு கிழக்கு மாகாணங்களில் இனி வழங்கவுள்ள காணிகளில் இனவிகிதாசாரம் பினபற்றப்பட்டால் 74 சதவீதமான சிங்களவர்களையே அதிகம் குடியேற்ற வாய்ப்புள்ளது.

மொத்தத்தில் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் நாட்டைப்பொறுப்பேற்ற சிங்களத்தலைமைகள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளைவிட அழிவைத்தரக்கூடிய செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுள்ளனர்.அதாவது இனவாதம் மதவாதம் என்கின்ற குருட்டு இருட்டுப் பாதைகளில் நாட்டையும் சிங்கள மக்களையும் வழி நடாத்திச் சென்றுள்ளனர்.இதனால் யுத்தம்,இனவழிப்பு,கலாசார அழிப்பு,நிலப்பறிப்பு,வரலாற்றழிப்புகூடவே பொருளாதார அழிப்பு மூலமாக தமிழ் சிங்கள மக்களை எதிரும் புதிருமாக வடக்கு தெற்கு துருவ மக்களாக மாற்றி இரு தேசத்தவர்களாச் சிந்திக்க செயற்பட சிங்களத்தலைவர்கள் செய்துள்ளனர்.சுதந்திரத்தின் பின்னர் தமிழ்மக்கள் உரிமையென்னும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கவில்லை.மாறாக அவசரகாலச்சட்டம்,பயங்கரவாத தடைச்சடம்,இனவாத மதவாத மொழிவாத சட்டங்கள் அரசியல் யாப்பபுகளின் கீழ் யுத்த கந்தக்க்காற்றுகள்,அழிப்பு ஒழிப்பு என்னும் அனல் காற்றுகளையே சுவாசித்து வருகின்றனர்.உரிமை சுதந்திரம் சமத்துவம் நீதி நியாயம் என்ற சுதந்திர தென்றல் காற்றுகளை இதுவரை தமிழர்கள் சுவாசிக்கவில்லை.இப்போது இனவாதத்தின் நீண்டகால விளைவால் ஏற்பட்ட யுத்தக்குற்றம் பொருளாதாரக்குற்றம் என்னும் பாவமூட்டைகளை அரசு சுமக்கவேண்டியுள்ளது. பொருளாதாரக்குற்றத்தால் ஏற்பட்ட விலையேற்றங்கள் பொருட்தட்டுப்பாடுகள் என்கின்ற தேவையற்ற கடினமான சுமையை அன்றாடம் இலங்கை மக்கள் அதிகமானவர்கள் சுமக்கின்றனர்.ஆனால் ஆட்சியாளர்களுக்கு இந்த சுமைகள் அழுத்துவதில்லை.ஏனென்றால் அவர்கள் பொருளாதாரத்தில் செழிப்பானவர்கள்.ஊழல் மோசடி கையூட்டுகள்,கமிசன்கள் என்பன பெரும்பாலான அவர்களது செழிப்புகளுக்கு அடிப்படைகளாக உள்ளன.இப்படியான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்தமை மக்கள் குற்றமேயாகும்.தேர்தலில் ஒருநாள் மதுமயக்கம் மதிமயக்கத்தால் ஏற்பட்ட தெரிவுகள் ஐந்தாண்டுகள் தண்டனைகளாகத் தொடர்கின்றன.74 ஆண்டுகள் அனுபவித்த தண்டனைகள் போதாத மக்காள்.அவர்கள் ஏமாற்றப் பிறந்தவர்கள் என்றால்,நாங்கள் ஏமாறத்தானோ பிறந்தோம் இத்திரு நாட்டில்.இதனால்தான் திருநாட்டைத் தெருவோடு சுமக்க வைத்துள்ளார்கள் நம்நாட்டின் தலைவர்கள்.



# காதி நீதிமன்ற முறைமை வரமா சாபமா?

காதி நீதிமன்ற முறைமையானது 1930 களில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தால் ஆளப்படுகின்ற முஸ்லிம்களது விவாகம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக நிறுவப்பட்ட ஒரு நீதிமன்ற முறைமையாகும். கூடனு ஒடிணஞ் நண். ஷூடிண்டுடிண க்ட்ட்ச் என்ற வழக்கில் ஒரு பெண் விவாகரத்துப் பெறுவதற்கு நீதிமன்றத்தை அணுகுவதில் உள்ள சிரமத்தினைக் கருத்திற்கொண்டு அந்த வழக்கில் வழக்குரைஞராக இருந்த நீதியரசர் அக்பர் இஓ அவர்களதும் இன்னும் பலரதும் கடின முயற்சியின் பலனாக எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமே காதி நீதிமன்ற முறைமையாகும். சுதந்திரத்திற்கு முன்னரான இலங்கையில் சாத்தியப்படுத்தப்பட்ட இந்தக் கட்டமைப்பு சுத்தந்திர இலங்கையில் முயற்சி செய்யப்பட்டிருப்பின் சாத்தியமில்லாத ஒன்றாகவே போயிருக்கும்.

காதி நீதிமன்ற முறைமையானது பின்வரும் காரணங்களால் பொதுமக்களுக்கு இலகுவாக



அணுகச் சாத்தியமான ஒரு முறைமையாகக் கருதப்படுகின்றது.

அணுகுதல் இலகு -சட்டத்தரணி ஒருவரின் துணை இல்லாமல் தனது வழக்கினைப் பதிவு செய்ய முடியும்.

அதிகம் செலவில்லை - குறைந்த அளவான முத்திரைக் கட்டணம் மட்டுமே செலவாகும். கால தாமதமாகாது. வழக்குகள் ரகசியமாக விசாரிக்கப்படும் மூன்று மேல்முறையீட்டு வாய்ப்புகள் காணப்படுகின்றன

- ★ காதிகள் சபை
- ★ மேல் முறையீட்டு நீதிமன்றம்
- ★ உயர் நீதிமன்றம்

இருந்த போதும் இந்த காதி முறைமையில் பல குறைபாடுகளும் காணப்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

காதிகள் நியமிக்கப்படுகின்ற போது அவர்களுக்கு உரிய கல்வித் தகைமைகள் எதுவும் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. தற்போதைய முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் (1951) நன்நடத்தை உள்ள முஸ்லிமான ஒரு ஆண் காதியாக நியமிக்கப்பட முடியும் என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

காதிகள் தொடர்பில் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அவர்கள் பாரபட்சமாக நடக்கின்றார்கள்.

தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

அவர்கள் ஊழல்வாதிகளாக இருக்கிறார்கள்.

சட்டத்தைச் சரியாகக் கையாளும் ஆற்றல் அற்றவர்களாக இருக்கின்றார்கள்.

என்பன போன்ற பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

காதி நீதிமன்றங்களுக்கு எனத் தனியான ஒரு கட்டிடத் தொகுதி காணப்படவில்லை.

வழக்குகளின் ஆவணங்களை முறையாகப் பேணக்கூடிய ஒரு பொறிமுறை பின்பற்றப்படுவதில்லை.

தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் காதி நீதிமன்றங்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே அத்தீர்மானங்கள் பின்பற்றப்படாத விடத்து நீதவான் நீதிமன்றத்திற்குச் சென்று அந்தத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

மேலே சொன்ன காரணங்களினால் காதி நீதிமன்றங்களினுடைய செயற்பாடுகள் போதிய அளவு திருப்திகரமாக இல்லை. இதனால் தற்போது இந்த நீதிமன்ற முறைமையைக் கைவிடும் படி பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கங்கள் மாவட்ட நீதிமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டும் எனவும், 'காதி' என்ற பெயர் தொடர்ந்து பயன்படுத்தப்படக் கூடாது எனவும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

மேலே சொல்லப்பட்ட சிக்கலான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, முஸ்லீம் விவாக விவாகரத்துச் சட்டத்திற்குத் திருத்தங்களைப் பரிந்துரை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவானது காதி நீதிமன்ற முறைமையை Muslim Marriage conciliator என்ற ஒரு தலைப்பின் கீழ் மாற்றுவதற்கான பரிந்துரை ஒன்றை முன் வைத்துள்ளது. இங்கு நாம் அவதானிக்க வேண்டியது யாதெனில் 'காதி' என்ற பெயர் Muslim Marriage conciliator என்ற பெயரினால் மீள் நிரப்பப்படத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.



**சட்டத்தரணி ஷிபானா ஷரீபுத்தீன்**

> **தற்போது காணப்படுகின்ற காதி நீதிமன்றங்கள் மிகுந்த குறைபாடுகளுடன் காணப்படுகின்றன என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அக்குறைபாடுகள் காதி நீதிமன்றங்கள் இல் லாமல் ஆக்கப்படுவதற்கு அல்லது அதனுடைய அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு ம ாவட்ட நீதிமன்றங்களுக்கு அவை வழங்கப்படுவதற்கு அடிப்படையாக அமை யக்கூடாது. மாறாக காதி நீதிமன்றங்கள் திறம்பட செயல்படுவதற்கு அவசியமான திருத்தங்கள் செய்யப்பட்டு காதி நீதிமன்ற முறைமையானது மேம்படுத்தப்பட வேண்டும்.**

இந்த முன்மொழிவைச் செய்கின்றவர்கள் முன்வைக்கின்ற வாதமாவது, 'காதி' என்பது நீதிபதியைக் குறிக்கின்ற ஒரு அரபுச் சொல். எனவே அந்த வார்த்தையில் நாம் அதிகம் தொங்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை என்பதாகும். உண்மையில் இலங்கையைப் பொறுத்தவரையில் 'காதி' என்பது வெறுமினே நீதிபதியினைக் குறிக்கின்ற அரபுசச்சொல் மாத்திரம் அல்ல. அது முஸ்லிம் சமூகத்தினுடைய அடையாளங்களில் ஒன்று. அல்லாது போனால் இந்தசச்சொல்லைப் பயன்படுத்தக்கூடாது என இனவாதிகள் அழுத்தம் கொடுக்கவேண்டிய அவசியம் என்ன? முஸ்லிம் சமூகம் இந்நாட்டில் நீண்டகாலமாகத் தனித்துவமான பண்புகளுடன் வாழ்கின்றது என்பதற்குரிய அடையாளங்களில் ஒன்றாக இச்சொற்பிரயோகம் காணப்படுகிறது. இந்தச் சொல்லானது ஏறத்தாழ 100 வருடங்களாக முஸ்லிம்களுடைய அடையாளமாக திகழ்கின்றது. எனவே 'காதி' என்ற சொல்லைச் சட்டத்திலிருந்து நீக்க விளைவதானது இந்த அடையாளத்தை அழிப்பதற்கான ஒரு முயற்சியாகும். இந்த நாட்டில் முஸ்லீம் சமூகத்தின் நீண்டகால இருப்பைச் சுட்டி நிற்கின்ற அடையாளங்களைத் திட்டமிட்டு அழிக்கின்ற பல நடவடிக்கைகள் நமது கண்முன்னே நடந்தேறுவதை அறிந்திருந்தும் இந்த விடயத்தில் நமது படித்த சமூகம் அலட்ச்சியம் காட்டுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

மேலும் இத்திருத்தத்தின் மூலம் காதி நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பெருமளவு குறைக்கப்படுகின்றது. இதன் மூலம் அதிகளவான விவாகம் தொடர்பான வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்திற்கு செல்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மாவட்ட நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் அதன் நடைமுறைகள் நீண்ட காலத்தை எடுத்துக் கொள்வதாகவும் செலவு மிக்கதாகவும் வழக்குகள் பகிரங்கமாக விசாரிக்கப்படக்கூடியதாகவும் காணப்படுகிறது. இங்கு நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம், எமது சமூகத்தில் காணப்படுகின்ற பெண்களுடைய மனநிலை. அவர்களுடைய கலாச்சாரம் நடைமுறைகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்றபோது அவர்கள் ஒரு நீதிமன்றச் சூழலுக்குச் சென்று தங்களது விவாகம் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வதை விரும்பக் கூடியவர்களாக இல்லை. எனவே காதி நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மாவட்ட நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுமாயின் சட்டத்தின் அடிப்படையில் நீதியைத் தேடிப் பெற்றுக் கொள்கின்ற முயற்சியை எமது பெண்கள் கைவிடுவார்கள். இதனால் அவர்களின் மன அழுத்தம் அதிகரிப்பதோடு அவர்களுடைய ஆரோக்கியமான வாழ்க்கை பாதிக்கப்படும். இந்த விடயம் இலகுவாக எடுக்கக் கூடியதல்ல. மிகக் கூர்மையாகக் கவனிக்கப்பட வேண்டியது.

மேலும் எமது நாட்டிலே பல நீதிமன்றத் தொகுதிகளில் மாவட்ட நீதிமன்றங்களும் நீதவான் நீதிமன்றங்களும் ஒரே கட்டடத் தொகுதிக்குள் அமைந்திருக்கின்றன. நீதவான் நீதிமன்றங்களுக்கு வருகின்ற வழக்குகள் எப்படியானவை அந்த வழக்குகளோடு சம்பந்தப்பட்டு அங்கு வருகை தருபவர்கள் எப்படியானவர்கள் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அவ்வாறான ஒரு சூழலில் எமது பெண்களை அவர்களுடைய திருமணம் சம்பந்தமான வழக்குகளைத் தீர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்வது ஆரோக்கியமானதா?

பெண்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோஷத்தோடு நாம் முன்வைக்கின்ற முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திற்கான திருத்தங்கள் அதே பெண்களைப் பாரபட்ச படுத்துவதாயும், நோவினை செய்வதாகவும், சங்கடங்களுக்கு ஆட்படுத்துவதாயும், அவர்களைப் புதிய புதிய பிரச்சினைக்குள் தள்ளி விடுவதாயும் அமைவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தத் திருத்தங்களாவன எங்களுடைய பெண் சமுதாயத்தைப் பாதிக்கக்கூடிய புதிய பிரச்சினைகளுக்குள் அவர்களைத் தள்ளிவிடாமற் பாதுகாப்பது எமது கடமையாகும்.

பொதுச்சட்டத்தால் ஆளப்படுகின்ற சமூகத்தில் திருமணம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளுகின்ற சமூக செயற்பாட்டாளர்களோடு இது தொடர்பில் உரையாடுகின்ற பொழுது தமது சமூகத்தில் திருமணம் சார் பிணக்குகள் தொடர்பில் நீதிமன்றத்தினை நாடுவது எளியவர்களுக்கு மிக்க கடினமான ஒன்று என்கின்றனர். சமூகத்தில் காணப்படுகின்ற நலன்புரி அமைப்புகளின் உதவியுடன் பல பிணக்குகள் கையாளப்படுவதாயும் (இதற்கு சட்ட அங்கீகாரம் இல்லை) அவர்களின் இறுதித்தேர்வாகவே நீதிமன்றம் செல்வது அமைகின்றது என்றும் சொல்கின்றனர். முஸ்லிம்களுக்கு இருக்கின்ற காதி நீதிமன்ற முறைமையானது மிகப்பெரும் வசதி என்றும் அதில் குறைபாடுகள் காணப்படுமாயின் அவற்றைச் சீர்படுத்தும் வகையான திருத்தங்களைச் செய்து அந்தக்கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டுமேயன்றிக் கையுதிர்க்க இடமளிக்காதீர்கள் என எங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தற்போது காணப்படுகின்ற காதி நீதிமன்றங்கள் மிகுந்த குறைபாடுகளுடன் காணப்படுகின்றன என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அக்குறைபாடுகள் காதி நீதிமன்றங்கள் இல்லாமல் ஆக்கப்படுவதற்கு அல்லது அதனுடைய அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு மாவட்ட நீதிமன்றங்களுக்கு அவை வழங்கப்படுவதற்கு அடிப்படையாக அமையக்கூடாது. மாறாக காதி நீதிமன்றங்கள் திறம்பட செயல்படுவதற்கு அவசியமான திருத்தங்கள் செய்யப்பட்டு காதி நீதிமன்ற முறைமையானது மேம்படுத்தப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் எமது சமூகம் காட்டுகின்ற அசிரத்தையானது எதிர்காலத்ததில் பல அசௌகரியங்களை எமது சமூகத்திற்கு ஏற்படுத்தும். தற்போது நாடு இருக்கும் நிலையில் மீண்டும் இவ்வாறான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துவது என்பது குதிரைக்கொம்பு. அது 'கையில் இருக்கும் பூனையை விட்டுவிட்டு பேஸ் பேஸ்' என்றழைத்த கதையாகிவிடும். எமது முன்னோர்களின் கடின உழைப்பில் சுதந்திரத்திற்கு முன்னரான இலங்கையில் எமக்குக்கிடைத்த இந்தக்கடடமைப்பைத் தக்கவைக்க முயற்சிக்காமல் இருப்பது, அல்லது நீயா நானா என்று போட்டிபோட்டுக்கொண்டு முரண்பட்டுக்கொள்வதானது, கூத்தாடிக் கூத்தாடித் தோண்டியைப் போட்டுடைத்த நந்தவனத்து ஆண்டியின் நிலைக்கு ஒப்பானது.



# சக்தி வழிபாட்டில் நவராத்திரிக்கும்ப விரத மகிமையும் மூதூர் கிழக்கில் கும்ப விழாவும்







(அ . அச்சுதன்)

மனிதன் மனிதனாக வாழத்தேவைப்படுவது வீரமும், செல்வமும், கல்வியும் இந்த மூன்று பேறுகளுக்கும் துர்க்கா, லக்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியரையும் முதன்மைப்படுத்தி வழிபட்டு வருகின்ற சைவ சமயத்திவர்கள் சக்தி வழிபாட்டில் நவராத்திரியின் முக்கியத்துவம் பற்றி புராண வாயிலாக நன்கு தெரிந்து இந்த மகத்துவமான விரதத்தை ஒவ்வொரு ஆண்டும் இந்துக்களின் காலக்கண்ணாடியாக விளங்கும் பஞ்சாங்கம் பதிவிட்ட படி நவராத்திரிக் கும்ப விரதத்தை அனுஸ்டித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்துக்கள் அனுஸ்டிக்கும் விரதங்கள் பலவிருந்தாலும் கூட சிவவிரதங்களில் கேதார கௌரி அம்பாள் அனுஸ்டித்த கேதார கௌரி விரதத்தையும், சக்தி விரதங்களில் நவராத்திரி விரதத்தையும் அதிகமானோர்கள் பரவலாக நோற்று வருவதை குறிப்பாக சொல்ல முடியும்,

புரட்டாதி முதல் கார்த்திகை வரை இவ்விரத காலம் நடைபெறுவதுண்டு. நிகழும் சுபகிருது வருடம் புரட்டாதித் திங்கள் 9ஆம் நாள் 26.09.2022 திங்கட்கிழமை வளர்பிறை பிரதமைத் திதியில் தொடங்கும் ʻநவராத்திரி விரதம்ʼ கும்பஸ்தாபனத்துடன் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை வடபுலத்திலிருந்து வெளியாகும் வாக்கியம், திருக்கணித பஞ்சாங்கங்கள் பதிவேற்றம் செய்துள்ளன.

இதன் படி நாடெங்கிலுமுள்ள நமது இந்துக் கோயில்களில் அம்மன் ஆலயங்களில் நவராத்திரிக் கும்ப விரத கும்பஸ்தாபனம் முறைப்படி செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் இடம்பெற்று 10ஆம் நாள் விஜயதசமியில் மகிசூர

வதம் நடைபெற்று கும்பவிழா ஊர்வலத்துடன்





கும்பம் சொரிதலுடன் நிறைவுபெறும். இது பொதுவாக நடைமுறையில் காணக்கூடியதாகவுள்ளதைக் காணலாம் .

இறுதி மூன்று நாளும் சரஸ்வதி பூசை, ஆயுத பூசை முக்கியத்துவம் பெறும். ஆகமம் சாராதவகையில் விசேடமாக திருகோணமலை மாவட்டத்தில் , மூதூர் கிழக்குப் பகுதிகளில் நவராத்திரிக்கும்ப வழிபாட்டு முறைகள் முற்று முழுதாக பரம்பரை வழமைப்படி கிராமிய முறையிலான மந்திர மயமாக்கலுடன் நடைபெற்று வருவது பல நூறுவருடங்களுக்கு மேலாக தொடரும் சக்தி வழிபாட்டில் நவராத்திரி கும்ப விரத விழாவின் விசேட சிறப்பம்சமாகும் என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

பெரும்பான்மையாக கடவுள் பக்தியும் சைவப்பற்றாளர்களுமாவார். மாந்தீரீக செயற்பாடுகளில் இப்பகுதி மக்கள் பெரும் ஆர்வமுடையவர்கள் என்பதை நவராத்திரிக்கும்ப விழாவுக்கு வருபவர்கள் நேரில் காணமுடியும் அதுமட்டுமின்றி சக்திவழிபாட்டில் பக்தியுடையவர்கள் என்பதையும் பறைமேளம் அடித்தல், உடுக்அடித்தல், சல்லாரி கைத்தாளம் பண்ணோடு அகவல், அம்மன் காவியம் பதிகம் கும்மி அம்மனை பாடுபவர்களையும் இப்பகுதி கும்பக்கோயில்களில் பரவலாக பார்க்கலாம்.

குழுக்களாக சேர்ந்து பாடும்போது ஆட்டங்களும் இடம்பெறும். சேனையூர், மருதநகர். சாலையூர், சம்புக்கழி கடற்கரைச்சேனை, சந்தோசபுரம் கட்டைபறிச்சான் கல்லாம்பார், கணேசபுரம், அம்மன்நகர் ஆகிய இடங்களில் நவராத்திரி கும்பவிழா களைகட்டும் காட்சிகள் பார்ப்பதற்கு பரவசத்தையும் பயங்கலந்த பக்தியையும் பார்ப்பவர்களுக்கு ஏற்படுத்தும்.

இதனால் மூதூர் கிழக்கு விழாக் கோலந்தான். ஒவ்வொரு கும்பக் கோயில்களிலும் தலைப்பூசாரி இணைப்பூசாரி உதவிப்பூசகர்கள் தொண்டர்கள் எனப்பலர் இருப்பார்கள். சன்னதம் ஆடுபவர்களை மந்திரசக்தியால் விழுத்துவது கட்டுவது வழிமறிப்பது என்பனவும் இடம்பெறும் இதனை ஒரு சாரார் செய்ய பூசாரிமார் தடைகளையுடைப்பதும் உருவேற்றி சன்னதம் ஆடவைப்பதும் விழுந்து கிடப்பவர்களை எமுப்புவதும் மாந்திரீக மூலமே சன்னதம். ஆடுபவர்களை எழுப்புவதும் மாந்திரீக மூலமோ சன்னதம் ஆடுபவர்கள் உருவேறி சாட்டை அடிப்பதும் சாட்டை சுளட்டுவதும் பயங்கரமானதாக ஒருவிதகிலியை ஏற்படுத்தும் என்றால் பொய்யில்லை உண்மையே.

கும்பத்தின் அடிப்படை வேர்கள் பல நூறு ஆண்டுகள் பழமையின் சாயலில் தொடர்கின்றது அழகியலும் சடங்குமாய் நீளும் ஒரு பாரம்பரியமான தமிழர் விழா இது எனலாம். சமயம் என்பதற்கு அப்பாலும் இதனை நாம் தமிழர் கலாசார பண்பாட்டு அடையாளமாக இனங்காணமுடியும்.

கும்பம் வருகுது கும்பம் வருகுது
கூடியே எல்லோரும் வாருங்கடி – அருள்
மங்கள நாயகி சேனையூர் கும்பத்து
மாரியம்மன் கும்பம்பாருங்கடி

இப்பாடல்வரிகள் சேனையூர் கவிக்குயிலன் பாடியவை. இதுபோல் அனேகமான இனிய கும்மிப்பாடல்களையும் நவராத்திரிக்கும்ப ஊர்வல விழாவில் காணலாம் மாந்திரீக சக்தி மகிமை உருவேறி சன்னம் ஆடுபவர்களின் அற்புதக்காட்சிகளையும் ஊரின் சிறப்புக்களையும் காணலாம் மூதூர் கிழக்கில். .

# மக்களின் ஆணையே ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ள முன்னாள் போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி

(சுமன்)

தமிழ் மக்களுக்கான அர்ப்பணிப்பு என்ற விடயத்தில் முன்னாள் போராளிகளை விட உதாரணத்திற்கு எவரையும் குறிப்பிட முடியாது. அவர்கள் இன்று ஜனநாயக வழியில் மக்களுக்காகப் போராட முன்வந்துள்ளார்கள். அவர்களின் அர்ப்பணிப்பை உணர்ந்து அவர்களுக்கான களத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். மக்களின் ஆணையே ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ள முன்னாள் போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்ற கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போரட முன்வந்த பல இயக்கங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து செயற்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட எமது முன்னாள் போராளிகளும் ஜனநாயக நீரோட்டத்தினூடாக அரசியல் களத்தில் நுழைந்துள்ளார்கள். ஆனால் யுத்தம் முடிவுற்று இத்தனை வருடங்களாகியும் எமது முன்னாள் போராளிகள் மீதான அடக்குமுறைகள், அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

தற்போது முன்னாள் போராளிகளாகிய நாம் தமிழ்த்தேசியப் பரப்பில் எமது மக்களுக்காக ஜனநாயக ரீதியில் போராட முன்வந்துள்ளோம். எமது போராளிகளுக்கான பாதுகாப்பு மக்கள் எமக்கு வழங்கும் ஆணையிலேயே தங்கியுள்ளது.

தமிழ் மக்களுக்கான அர்ப்பணிப்பு என்ற விடயத்தில் முன்னாள் போராளிகளை விட உதாரணத்திற்கு எவரையும் குறிப்பிட முடியாது. ஏனெனில் எமது மக்களின் விடுதலைக்காக தனது உயிரைத் துச்சமென நினைத்து தன் குடும்பம், இளமை எதுவுமே பாராது ஆயுதமேந்திப் போராட வந்தவர்கள். அவ்வாறானவர்களின் அர்ப்பணிப்பினாலேயே இத்தனை காலம் வடக்கு கிழக்கில் தமிழினம் நிலைத்திருக்க வழிவகுத்தது. அப்படியானவர்கள் இன்று ஜனநாயக வழியில் மக்களுக்காகப் போராட முன்வந்துள்ளார்கள். அவர்களின் அர்ப்பணிப்பை உணர்ந்து அவர்களுக்கான களத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.

இன்று முன்னாள் போராளிகள் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தங்கள் அரசியலை முன்னெடுத்து வருகின்றார்கள். பலதரப்பட்ட விசாரணைகள், கைதுகள் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றன. போராளிகள் ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுப்பதை முடக்க வேண்டும். போராளிகள் அரசியல் களத்தில் மக்களுக்காக அர்ப்பணிப்போடு செயற்படுவார்கள் அவற்றைத் தடுத்து அவர்களாகவே அரசியலில் இருந்து ஒதுங்கிவிடச் செய்ய வேண்டும் என்ற விடயங்களை மையப்படுத்தி திட்டமிட்ட செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.




கடந்த 1987களில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாகப் பல ஆயுதம் தாங்கிய போராட்ட இயக்கங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து அரசியல் நீரோட்டத்தில் இணைந்தன. ஆனால் தற்போது அந்த இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கு மக்களால் வழங்கப்படுகின்ற ஆணையால் அவ்வியக்கங்களின் உறுப்பினர்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும் அரசியலில் ஈடுபட முடிகின்றது.

அது போலவே எதிர்காலத்தில் அரசியல் களத்தில் எமது மக்கள் எமது முன்னாள் போராளிகளுக்கு வழங்கும் ஆணையே அவர்களை தமிழ் மக்களுக்கான சேவையைச் சுதந்திரமாகவும், எவ்வித அச்சுறுத்தல்கள் இல்லாமலும் மேற்கொள்ளும் நிலைமையை உருவாக்கும்.

எதிர்வரும் தேர்தல்களில் ஜனநாயகப் போராளிகள் கட்சியானது எமது தலைமையின் வழிநடத்தலில் உருவாக்கம் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்கவுள்ளதுடன் பல தேர்தல்களிலும் களம் காணவுள்ளது. எனவே அதன்போது எமது போராளிகளைக் கருத்திற்கொண்டும், அவர்களின் அர்ப்பணிப்பை நினைவில் வைத்து மக்களுக்காகப் போராடிய போராளிகளின் பாதுகாப்பிற்கான தங்களின் ஆதரவை வழங்க வேண்டும். மக்களின் ஆணை ஒன்றே முன்னாள் போராளிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் என்று தெரிவித்தார்.

கனகரவியின்

# இவர்களுடன் நான்

## நூல் அறிமுக நிகழ்வு!



# அழைப்பிதழ்

காலம் : 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : பிற்பகல் 3.00 மணி

இடம் : Pfarreizentrum - St. Karl,
Grosser Saal
Spitalstrasse 93
6004 Luzern

## தலைமை

திருமதி. ஆதிலட்சுமி சிவகுமார்
( எழுத்தாளர் )

## முதன்மை விருந்தினர்

திரு.எஸ்.கே.ராஜென்
( ஒலிபரப்பாளர் )

## சிறப்பு விருந்தினர்கள்

- திரு .தர்மலிங்கம் தங்கராஜா ( கவிஞர் )
- திரு. துரைராஜா ஜெயக்குமார்
( தலைவர் நல்வாழ்வு St Gallen Stadtparlamentarier )
- திரு.இராமநாதன் பவான்

## நிகழ்ச்சி நிரல்

- பொதுச்சுடரேற்றல்
- அகவணக்கம்
- விழாச்சுடரேற்றல்
- தமிழ்மொழி வாழ்த்து
- வரவேற்புரை :- செல்வி தயாபரன் நவீனா
- தலைமையுரை :- திருமதி ஆதிலட்சுமி சிவகுமார் (எழுத்தாளர்)
- வெளியீட்டுரை :- திருமதி அ.பிறேமினி (எழுத்தாளர்)
- வெளியீடு
- அறிமுகவுரை :- திரு. இணுவையூர் மயூரன் (கவிஞர்)
- மதிப்பீட்டுரை :- திருமதி மிதயா கானவி (எழுத்தாளர்)
- சிறப்பு விருந்தினர்கள் உரை :-
திரு.தர்மலிங்கம் தங்கராஜா (கவிஞர்)
திரு. துரைராஜா ஜெயக்குமார்
திரு.இராமநாதன் பவான்
- முதன்மை விருந்தினர் உரை :-
திரு.எஸ்.கே.ராஜென்(ஒலிபரப்பாளர்)
- கலை நிகழ்ச்சிகள்
- நன்றியுரை :- திரு.கனகரவி

"ஒன்றென்று கொட்டு முரசே! –அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே! –இந்த
நானில மாந்தருக்கெல்லாம்"

அன்புடன் அழைக்கிறோம்! அன்பை பகிர வாரீர்!